**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP. No.292/2019**

ம.சா.3 தேதி. 18.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr. R. ராஜசேகரன் | த/பெ, | M. ராமானுஜம்பிள்ளை |
| வயது | 63 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மயிலாடுதுறை பட்டமங்கலத்தெருவில் உள்ள வைரம் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.07.2025 அன்று பி. சந்திரசேகரன் என்பவரை பரிசோதனை செய்து அவரது மருத்துவ ஆவணங்களை பார்வையிட்டேன். அவருக்கு சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட விபத்தில் இடது முழங்காலுக்கு கீழே கால் துண்டிக்கப்பட்டு (B.K.Amputation) செய்யப்பட்டு இருந்தது. அவர் மரத்தினால் ஆன செயற்கை கால் பொருத்தியிருந்தார். அதன் எடை அதிகமாக இருந்ததாலும், அவரது கால் முனைப்பகுதியில் புண் ஏற்படுத்திக்கொண்டிருந்தற்கும், அவருக்கு நான் மரத்தினால் ஆன செயற்கைக்காலுக்கு பதிலாக மடங்கக்கூடிய Fibro Optic பொருளால் ஆன எடைக்குறைவாக உள்ள செயற்கை கால் பொருத்தவேண்டும் என்று அறிவுரை செய்தேன். அது தோராயமாக சுமார் 3 லட்சம் வரை செலவாகும் என்று சான்றிதழ் வழங்கியுள்ளேன். அந்த நான் வழங்கிய சான்று (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் மனுதாரருக்கு எவ்வித சிகிச்சையும் அளிக்கவில்லை என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் மரத்தினால் ஆன செயற்கை கால் இலவசமாக வழங்கப்படும் என்றால் சரிதான். தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இலவசமாக செய்யாமா என்றால் சில சமயங்களில் இலவசமாக செய்து தரப்படலாம். Fibro Optic செய்வதற்கு மேலே தொகையை விட குறைந்து தொகையில் செய்யலாம் என்று சொன்னால் சரில்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள தொகை தான் குறைந்த பட்ச தொகையாகும். Fibro Optic செயற்கை காலுக்கான

செலவுத்தொகையை நான் கூற இயலாது என்றாலும் அதனை உற்பத்தி செய்யும் நிறுவனம் தான்கூற இயலும் என்றாலும் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.